**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,B.Sc.,LLM.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி
2026ம் ஆண்டு ஜுன் மாதம் 23 நாள் செவ்வாய்கிழமை
(2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 9ம் நாள்)

**அசல் வழக்கு எண்.224/2019**
**(CNR No:TNSV160005892019)**

*****

1. காயாம்பு
2. பால்பாண்டி .... வாதிகள்

/எதிர்/

1. பாண்டியம்மாள்
2. கோட்டாட்சியர், தேவகோட்டை. .... பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கு திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 21.10.2016–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, அன்றே அசல் வழக்கு எண்.135/2016 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.224/2019 என எண்ணிடப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எ.பிரபாகர் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ரமேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 17.06.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வழக்குரை, எதிர்வழக்குரை, இருதரப்பு வாதம் ஆகியவற்றை ஓர்வு செய்தும் இந்நாள்வரை நிலுவையிலிருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமானது என விளம்புகை செய்யக்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:56:28 +0530

கோரியும், தாவா சொத்தை வாதிகள் அமைதியாக அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>வழக்குரையின் சுருக்கம்</u>:–**

2(1). தாவா சொத்து எஸ்.மாத்தூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்து சர்வே எண்:24/5 பி–யின் தென்புறமாகும். 24/5 பி–யின் மொத்த விஸ்தீரணம் 0.04.34 ஏர்ஸ் ஆகும். அதில் தாவா சொத்தின் விஸ்தீரணம் 0.02.16 ஏர்ஸ் ஆகும். மேற்படி சொத்து வாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தின் ஆதி சர்வே எண்:24/5 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 0.06.50 ஏர்ஸ் ஆகும். மேற்படி சொத்திற்கு 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர் பெயரில் பட்டா எண்:570 கூட்டுபட்டா ஏற்பட்டிருந்தது. மேற்படி சொத்தை 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர்கள் தலா 5 1/2 செண்ட் இடத்தினை பாத்தியமடைந்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வகையறாவினை உரிய முறையில் செலுத்தி அனுபவம் செய்து வந்தனர்.

2(2) 1ம் பிரதிவாதி சர்வே எண்:24/5ல் தனக்கு பாத்தியப்பட்ட 51/2 செண்ட் இடத்தை கடந்த 05.12.2008ம் தேதி வசந்தா என்பவருக்கு சரியான பிரதிபிரயோஜனம் பெற்று கொண்டு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் கிரையம் செய்து கொடுத்து விட்டார். மேற்படி கிரையத்தின் அடிப்படையில் ஆதி சர்வே எண்:24/5 உட்பிரிவு செய்யப்பட்டு 24/5எ விஸ்தீரணம் 0.02.16 ஏர்ஸ் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற வசந்தா பெயருக்கு பட்டா மாறுதல் செய்து பட்டா வழங்கப்பட்டு விட்டது. 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தது போக மீத விஸ்தீரணம் சர்வே எண்:24/5பி விஸ்தீரணம் 0.04.34 ஏர்ஸ் என உட்பிரிவு செய்யப்பட்டது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:56:36 +0530

2(3). சர்வே எண்:24/5பி–க்கு பட்டாவானது 1ம் வாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர்கள் பெயரில் மட்டும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் 1ம் பிரதிவாதி தனது செல்வாக்கை பயன்படுத்தி சர்வே எண்:24/5பி–க்கு 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர் பெயரில் 570 என கூட்டுபட்டாவை ஏற்படுத்தி விட்டார். சர்வே எண்:24/5பி கூட்டு பட்டாவாக இருந்த போதிலும் மேற்படி சொத்தினை முத்தையா சேர்வையும், 1ம் வாதியிமே பாத்தியமடைந்து அனுபவம் செய்து வந்தார்கள்.

2(4). சர்வே எண்:24/5பி–ன் வடபுறம் முத்தையா சேர்வை மகன் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். மேற்படி சொத்தின் தெற்குபுறம் வாதிகள் மாட்டுக்கூடம் கட்டியும் காலியிடத்தில் வைக்கோல் போர் வைத்து ஆடு, மாடுகள் கட்டி அனுபவம் செய்து வருகிறாகள். வாதிகளுக்குள் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் தாவா சொத்து 2ம் வாதிக்கு கிடைத்ததால் தாவா சொத்தில் உள்ள மாட்டு கூடத்திற்கு 2ம் வாதி தனது பெயரில் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்தியும், மின்இணைப்பு பெற்று மின்கட்டணம் செலுத்தி வருகிறார்.

2(5). தாவா சொத்தின் சர்வே எண்:24/5பி தெற்குபுறம் வாதிகள் 1ம் பிரதிவாதி உட்பட சகலரும் அறிய அனுபவம் செய்து வருகிறார்கள். மேற்படி முத்தையா சேர்வையோ அல்லது அவரது வாரிசுகளோ தாவா சொத்தினை வாதிகள் அனுபவம் செய்து வருவதை எந்த காலத்திலும், எப்போதும் ஆட்சேபித்தது கிடையாது. 1ம் பிரதிவாதியும் இதுநாள் வரை தாவா சொத்தின் தென்புறத்தில் வாதிகள் அனுபவித்து வருவதை ஆட்சேபனை செய்தது கிடையாது. தற்போது சர்வே எண்24/5பி-ல் தவறுதலாக 1ம் பிரதிவாதி பெயர் கூட்டுபட்டாவில் இருப்பதை தனக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டு தன் பாகத்தை கிரையம் செய்து கொடுத்ததை மறைத்து தாவா சொத்தில் தனக்கு பாத்தியம் உள்ளது போல் ஊருக்குள் பிரஸ்தாபித்து கொண்டு வாதிகளின் அனுபவத்தை தடையிடர் செய்து வருகிறார்.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:56:43 +0530

2(6). 1ம் பிரதிவாதி தாவா சொத்து கட்டுப்பட்ட சர்வே எண்:24/5பி-யில் உள்ள பட்டா எண்:570ல் உள்ள 1ம் வாதி பெயரை பட்டாவிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ள முயற்சித்து வருகிறார். இதுகுறித்து 2ம் பிரதிவாதியிடம் 1ம் பிரதிவாதி தவறுதலான தகவலை கொடுத்து வாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்றவும் இல்லையென்றால் தாவா சொத்திற்கான பட்டாவிலிருந்து 1ம் வாதியின் பெயரை ரத்து செய்ய போவதாக மிரட்டி வருகிறார். 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி அனுசரணையாக இருந்து தாவா சொத்திலிருந்து வாதிகளை வெளியேற்றவும் பட்டாவில் இருந்து 1ம் வாதி பெயரை நீக்கவும் முயற்சி செய்து வருவதுடன் தாவா சொத்திலிருந்து வாதிகளை அக்கிரமமான முறையில் வெளியேற்றப் போவதாக 1ம் பிரதிவாதி கடந்த 01.10.2016ம் தேதி முதல் பிரஸ்தாபம் செய்து வருவதால் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல்.

**3. <u>1ம் பிரதிவாதி தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>:–**

3(1). 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது. தாவா முழு சொத்தின் சர்வே எண்:24/5ஆகும், சர்வே எண்:24/5 எஸ்.எல்.ஆர் சமயத்தில் ராமன் சேர்வை மற்றும் பொன்னையா சேர்வை பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது. பின்னர் ராமன் சேர்வை மகனின் மகளான பாண்டியம்மாள் பெயரிலும், பென்னையா சேர்வை பெயரிலும் பட்டா ஏற்பட்டிருந்தது. சர்வே எண்:24/5ல் ஒரு பகுதியை வசந்தா என்பவருக்கு 1ம் பிரதிவாதி கடந்த 05.12.2008ம் தேதி பதிவு செய்த பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்து விட்டார். சர்வே எண்:24/5ன் மொத்த விஸ்தீரணம் 16 செண்ட். அதில் 1ம் பிரதிவாதிக்கு 8 செண்டும், பொன்னையா சேர்வை தரப்பினருக்கு 8 செண்ட் பாத்தியமாகும்.

3(2). 1ம் பிரதிவாதி வசந்தா என்பவருக்கு விற்பனை செய்த பகுதி போக மீதம் உள்ள 2.76 செண்ட் ஆக கிழக்கு பக்கம் 1ம் பிரதிவாதி அனுபவத்தில் காலியிடமாக உள்ளது. 1ம் பிரதிவாதி வசந்தா என்பவருக்கு கிரையம் கொடுத்த

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:56:49 +0530

பகுதி சர்வே எண்:24/5A என உட்பிரிவு செய்யப்பட்டு மீதமுள்ள பகுதி சர்வே எண்:24/5பி என உட்பிரிவு செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி மற்றும் பொன்னையா சேர்வை பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது. சர்வே எண்:24/5யை பொறுத்து வாதிகள் பெயரில் எஸ்.எல்.ஆர் சமயத்திலும் யூடிஆர் சமயத்திலும் பட்டா ஏதும் ஏற்படவில்லை. தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி தரப்பினரிடமோ, முத்தையா சேர்வை தரப்பினரிடமோ வாதிகள் தரப்பினர் எவ்வித கிரையமும் பெறவில்லை.

3(3). வாதிகள் தரப்பில் தேவகோட்டை ஆர்டிஓ கோர்ட்டில் தாவா வழக்கிலும், தாவா சொத்து தங்களுக்கு பூர்வீக பாத்தியம் என தெரிவித்துள்ளனர். வாதிகளுக்கு தாவா சொத்து பூர்வீகம் என காண்பிக்க எவ்வித ஆவணத்தையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை பெயரில் பட்டா உள்ள நிலையில் பட்டா உள்ள தங்களுக்கு எவ்வித நோட்டீஸ் அனுப்பப்படாமல் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத 1ம் வாதி பெயரில் RIPT அடிப்படையில் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் சேர்க்கப்பட்டுள்ளது.

3(4). தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டதால், மேற்படி 1ம் வாதி பெயரை பட்டாவிலிருந்து நீக்க வேண்டி தேவகோட்டை ஆர்டிஓ அவர்களும் விசாரணை செய்து கடந்த 28.04.2017ம் தேதி தீர்ப்பு பிறப்பித்துள்ளார். மேற்படி தீர்ப்பிலும் காயம்பூ என்பவர் தாவா சொத்து தனக்கு பூர்வீகம் என தெரிவித்துள்ளார். ஆனால் மேற்படி காயாம்பூவிற்கு பூர்வீக சொத்து என்பதற்கு மேற்படியார் பெயரோ, அவரது தந்தை பெயரோ எஸ்எல்ஆர் நகலிலும், யூடிஆர் அ பதிவேட்டிலும் இடம் பெறவில்லை என்பதால் காயாம்பூ பெயரை சேர்த்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்கிறேன் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து 1ம் பிரதிவாதி அனுபவத்தில் காலியிடமாக உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.23 18:56:55 +0530

3(5). வாதிகள் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியம் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக் கூடியதல்ல.

3(6). சர்வே எண்:24/5பி–யை பொறுத்து பட்டா முத்தையா சேர்வை பெயரில் உள்ள நிலையில் மேற்படியாரின் வாரிசுகளும் தாவா வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் ஆவார். தாவா சொத்தில் ஓட்டு வீடு இருக்கிறது என்பதை வாதிகளே நிரூபணம் செய்ய வேண்டும். தாவா வழக்கிற்கு 2ம் பிரதிவாதி அவசியமற்ற கட்சிக்காரர் என்பதால் தாவா வழக்கு நிலைநிற்கதக்கதல்ல. வாதிகளுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித வழக்கு மூலமும் எழுவில்லை. மேலும் வழக்குமூலமும், நீதிமன்ற கட்டணமும் தவறாகும். உண்மையான உரிமை மூலத்தினை கொண்டு ஏற்படாத பட்டாவின் அடிப்படையில் உரிமையோ அனுபவ பாத்தியமோ கோர இயலாது என்பது சட்டவிதி. எனவே வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கினை 1ம் பிரதிவாதி தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. **<u>வழக்கெழுவினாக்கள்</u>:–**

1. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா?
2. தாவா சொத்து வாதிகளின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறதா?
3 வாதிகள் கோரியுள்ளவாறு விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
4 வாதிகள் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
5 வாதிகளுக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:01 +0530

**6. சான்றுகள்:–**

6(1) வாதிகள் தரப்பில் 1ம் வாதி காயம்பூ வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதிகள் தரப்பில் கருவப்பாண்டியன் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதிகள் தரப்பில் கிருஷ்ணரூபன் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிகள் குறுக்கு விசாரணையின் போது பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள் பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் பிரதிவாதிகள் தரப்பில் முத்துராமன் என்பவர் பி.வா.சா.2 ஆகவும், போஸ் என்பவர் பி.வா.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6(2) இவ்வழக்கில் வா.சா.3ன் மூலம் ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.1ன் மூலம் பி.வா.சா.ஆ1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் தவறுதலாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளதால் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களின் வரிசை மாற்றியமைக்கப்பட்டு பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.6 வரை குறியீடு செய்யப்படுகின்றன. இதனால் வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பாதிப்பும் எற்பட போவதில்லை என உளநிறைவடைகிறது.

**7. வழக்கெழுவினா 1 முதல் 4 -ன் தீர்முடிவு:–**

1. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா?
2. தாவா சொத்து வாதிகளின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறதா?
3 வாதிகள் கோரியுள்ளவாறு விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
4 வாதிகள் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.23 18:57:08 +0530

வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

7(1). சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், எஸ்.மாத்தூர் குரூப், எஸ்.மாத்தூர் கிராமத்தில் பட்டா எண்:570 ல் சர்வே எண்:24/5 பி–யில் தென்புறம், விஸ்தீரணம் 0.02.16 ஏர்ஸ் அதாவது சுமார் 5 1/2 செண்ட்டு புன்செய் நிலமும் அதில் உள்ள சிறிய ஓட்டுக்கூடமும், அதிலுள்ள மின் இணைப்பு மற்றும் சகலவித பாத்தியங்களும் என்பது வழக்கு சொத்தாகும்.

7(2). வாதி தரப்பில், தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றும் தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தின் ஆதி சர்வே எண்:24/5 ன் பட்டா எண்:570 ஆனது 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர்கள் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டு தலா 5 1/2 செண்ட் இடத்தை பாத்தியமடைந்து அனுபவம் செய்து வந்ததாகவும், 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட 5 1/2 செண்ட்டை வசந்தா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து விட்ட பின்னர் அதன் சர்வே எண்:24/5 எ உட்பிரிவு செய்யப்பட்டு வசந்தா பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் சர்வே எண்:24/5 பி–ல் தவறுதலாக 1ம் பிரதிவாதி, வாதி மற்றும் முத்தையா பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டிருப்பதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு 1ம் வாதியின் பெயரை கூட்டு பட்டாவிலிருந்து நீக்கி ஆக்கிரமிப்பு செய்ய போவதாக 1ம் பிரதிவாதி பிரஸ்தாபம் செய்து வருவதால் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்ததாக வாதம் முன்வைக்கப்பட்டது.

7(3). 1ம் பிரதிவாதி தரப்பில், தாவா முழு சொத்தின் சர்வே எண்:24/5 என்பது எஸ்.எல்.ஆர். பட்டாவில் ராமன் சேர்வை மற்றும் பொன்னையா சேர்வை பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றும் பின்னர் யூடிஆர் சமயத்திலும், எஸ்.எல்.ஆர் சமயத்திலும் ராமன்சேர்வை மகனின் மகளான பாண்டியம்மாள் பெயரிலும், பொன்னையா சேர்வை பெயரிலும் பட்டா ஏற்பட்டு, சர்வே எண்:24/5 ல் ஒரு பகுதியை வசந்தா என்பவருக்கு 1ம் பிரதிவாதி 05.12.2008 ல் பதிவு செய்த பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றும் சர்வே எண்:24/5 ன் மொத்த

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:14 +0530

விஸ்தீரணம் 16 செண்டில் 8 செண்ட் 1ம் பிரதிவாதிக்கும், 8 செண்ட் பொன்னையா சேர்வைக்கும் பாத்தியம் ஏற்பட்டு, 1ம் பிரதிவாதி வசந்தா என்பவருக்கு விற்பனை செய்த பகுதி போக மீதம் உள்ள 2.76 செண்ட் கிழக்கு பக்கம் 1ம் பிரதிவாதி அனுபவத்தில் காலியிடமாக உள்ளது என்றும் வாதிகள் பெயரில் யூடிஆர், எஸ்எல்.ஆர் சமயத்தில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றும் 1ம் பிரதிவாதியிடமோ, முத்தையா தரப்பினரிடமோ வாதிகள் எந்த கிரையமும் பெறவில்லை, அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும் 1ம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பிரதிவாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியம் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று வாதம் முன்வைக்கப்பட்டது.

7(4). வாதிகள் தரப்பில் தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீகம் பாத்தியம் என்று கூறப்படுகிறது. 1ம் பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தில் 1ம் வாதிக்கு எவ்வித பாத்திய அனுபவம் இல்லை என்று கூறப்படுகிறது. எனவே தாவா சொத்து 1ம் வாதிக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தா? என்பதை முதலில் ஆராய்ந்து கண்டறிய வேண்டியது அவசியமாக உள்ளது.

7(5). 1ம் வாதி காயாம்பூ தனது தரப்பு வழக்கை வலியுறுத்தி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 ஆனது 22.09.1984ம் தேதியிட்ட பிர்க்கா ஆய்வாளர் வழங்கிய தாக்கீதாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில் 22.09.1994ம் தேதி எஸ்.மாத்தூரில் நடந்த முகாமில் சர்வே எண்:24/5ல் விஸ்தீரணம் 0.06.5ற்கு பட்டா எண்:570 என ச.பாண்டியம்மாள், பொ.முத்தையா சேர்வை, கரு.காயாம்பு சேர்வை ஆகியோர்கள் பெயரில் கூட்டு பட்டா வழங்க பிர்கா ஆய்வாளர் கிராம நிர்வாக அதிகாரிக்கு வழங்கிய தாக்கீதாகும்.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:20 +0530

7(6). வா.சா.ஆ.2 ஆவணமானது 05.12.2006ம் தேதியிட்ட கிரைய பத்திரமாகும். வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் 05.12.2008ம் தேதி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், எஸ்.மாத்தூரில் வசிக்கும் வீரபாண்டி மனைவி வசந்தா என்பவருக்கு மேற்படி கிராமத்தில் வசிக்கும் சந்திரன் மனைவி பாண்டியம்மாள் என்பவர் பட்டா எண்:570ல் கூட்டுபட்டாவில் எனது பாகத்திற்கு கிடைத்து நாளது தேதி வரை அனுபவித்து வரும் காரைக்குடி பதிவு மாவட்டம், திருப்பத்தூர் சார்பதிவு வட்டம், எஸ்.மாத்தூர் குரூப், எஸ்.மாத்தூர் கிராமத்தில் 570 பட்டாவில் சர்வே எண்:24/5 ஹெக்டேர் 0.06.5க்கு செண்டு 16ல் என் பாகம் 3ல் 1க்கு வடபுறம் செண்டு 5.34க்கு 2328 சதுரடியும், சகல பாத்தியங்களும் என்பதை கிரையம் செய்து கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

7(7). வா.சா.ஆ-3 ஆவணமானது 06.10.2016ம் தேதியிட்ட சர்வே எண்:24/5பி-ன் 10(1) கணிணி பட்டாவாகும். வா.சா.ஆ-3 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மாத்தூர், பட்டா எண்:570, சர்வே எண்:24/5பி-ல் 0.4.34 விஸ்தீரணம் கொண்ட புஞ்சை நிலம் பாண்டியம்மாள், முத்தையா சேர்வை, காயாம்பு சேர்வை ஆகியோர்கள் பெயரில் 10(1) பட்டா ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(8). வா.சா.ஆ-4 ஆவணமானது 25.02.2015ம் தேதியிட்ட 1424 பசலிக்கான ரசீதாகும். வா.சா.ஆ-4 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், எஸ்.மாத்தூர் கிராமத்தில் வசிக்கும் பாண்டியம்மாள், முத்தையா சேர்வை, காயாம்பு சேர்வை ஆகியோர்கள் பெயரில் 1424 பசலியில் பட்டா எண்:570ற்கு வரி செலுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(9). வா.சா.ஆ.5 ஆவணமானது வீட்டு வரிரசீதுகளாகும். வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், எஸ்.மாத்தூர் ஊராட்சியில் கதவு எண்:18-A-ற்கு 2014-2015, 2016-2017ம் ஆண்டிற்கு கே.பால்பாண்டி என்பவர் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகளாகும்.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:25 +0530

7(10). வா.சா.ஆ-6 ஆவணமானது மின்கட்டண ரசீதாகும். வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலிக்கையில் 16.07.2016ம் தேதி கே.பால்பாண்டி என்பவர் பெயரில் MDS477AR3S1841ற்கு செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீதாகும். வா.சா.ஆ-7 ஆவணத்தை பரிசீலிக்கையில் 16.07.2016ம் தேதி கே.பால்பாண்டி என்பவர் பெயரில் MDS477AR3S1848ற்கு செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீதாகும். வா.சா.ஆ-8 ஆவணத்தை பரிசீலிக்கையில் 26.10.2024ம் தேதி சர்வே எண்:24/5ற்கு ஏற்பட்ட வில்லங்க சான்றாகும்.

7(11) வா.சா.ஆ-9 ஆவணமானது 22.09.2016ம் தேதியிட்ட தேவகோட்டை சார் ஆட்சியரின் விசாரணை அறிவிப்பாகும். வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலிக்கையில் திருப்பத்தூர் வட்டம், எஸ்.மாத்தூர் குரூப், சர்வே எண்:24/5ல் திருமதி.பாண்டியம்மாள் தனது பெயரில் பட்டா உள்ளதால் வேறு ஒரு பெயரை கூட்டாக 10(1) கணக்கில் தவறாக சேர்க்கப்பட்டதை நீக்க கோரி தாக்கல் செய்த மனுவிற்கு காயாம்பு சேர்வை என்பவருக்கு தேவகோட்டை சார் ஆட்சியர் 22.09.2016ம் தேதி அனுப்பிய விசாரணை அறிவிப்பாகும்.

7(12). வா.சா.ஆ.10 ஆவணமானது குடிநீர் வரி ரசீதாகும். வா.சா.ஆ-10 ஆவணத்தை பரிசீலிக்கையில் எஸ்.மாத்தூர் கிராமத்தில் வசிக்கும் காயாம்பு என்பவர் பெயரில் எஸ்.மாத்தூர் ஊராட்சியில் 2008ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு வரை செலுத்தியுள்ள தண்ணீர் கட்டண ரசீதுகளாகும்.

7(13). வா.சா.3ன் மூலம் 1ம் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.1 ஆவணமானது 28.04.2017ம் தேதியிட்ட தேவகோட்டை சார் ஆட்சியரின் உத்தரவாகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில் திருப்பத்தூர் வட்டம், எஸ்.மாத்தூர் குரூப், சர்வே எண்:24/5ல் திருமதி.பாண்டியம்மாள் என்பவர் தனது பெயரில் பட்டா உள்ளதால் வேறு ஒருவர் பெயரை கூட்டாக 10(1) கணக்கில் தவறாக சேர்க்கப்பட்டதை நீக்கம் செய்ய கோரி அனுப்பிய கடிதத்திற்கு 28.04.2017ம் தேதி தேவகோட்டை சார் ஆட்சியர் அவர்கள் 05.10.2009ன் படி பிறப்பிக்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்து

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:32 +0530

உத்தரவு பிறப்பித்துள்ளது தெரிய வருகிறது.

7(14). 1ம் பிரதிவாதி தரப்பில் தனது தரப்பு வழக்கை வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.2 ஆவணமானது சர்வே எண்:24/5 எஸ்.எல்.ஆர் பதிவேடாகும். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மவாட்டம், திருப்பத்தூர் வட்டம், எஸ்.மாத்தூர் குரூப் சர்வே எண்:24/5ற்கான எஸ்.எல்.ஆர் என்பது தெரிய வருகிறது.

7(15). பி.வா.சா.ஆ-3 ஆவணமானது சர்வே எண்:24/5ன் யூடிஆர் பட்டாவாகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் (யூடிஆர்) எஸ்.மாத்தூர் கிராமத்தில் வசிக்கும் சந்திரன் மனைவி பாண்டியம்மாள் மற்றும் ஒருவர் சர்வே எண்:24/5ல் 0.06.5 விஸ்தீரணம் கொண்ட புஞ்சை நிலத்திற்கு பட்டா வழங்கபட உள்ளதாக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(16). பி.வா.சா.ஆ.4 ஆவணமானது 21.03.2019ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவாகும். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாத்தூர் கிராமத்தில் சர்வே எண்24/5பி விஸ்தீரணம் 0.04.34 பழைய பட்டா எண்: 570 பாண்டியம்மாள், முத்தையா சேர்வை, காயாம்பு சேர்வை என்பவர்கள் பெயரிலிருந்து புதிய பட்டா எண்:995 பாண்டியம்மாள், முத்தையா சேர்வை ஆகியோர்கள் பெயரில் மீண்டும் பட்டா (Held Over) வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(17). பி.வா.சா.ஆ-5 ஆவணமானது 26.01.2026ம் தேதியிட்ட சர்வே எண்:24/5எ-யின் 10(1) பட்டாவாகும். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாத்தூர் கிராமம், சர்வே எண்:24/5எ, விஸ்தீரணம் 0.2.16க்கு அ.வீரபாண்டி மனைவி வசந்தா என்பவர் பெயருக்கு பட்டா எண்:844 வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(18). பி.வா.சா.ஆ.6 ஆவணமானது சர்வே எண்:24/5பி-ன் 10(1) கணிணி பட்டாவாகும். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம்,

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:38 +0530

சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாத்தூர் கிராமம், சர்வே எண்:24/5 பி, விஸ்தீரணம் 0.4.34 க்கு பாண்டியம்மாள், முத்தையா சேர்வை ஆகியோர்கள் பெயரில் பட்டா எண்:995 வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(19) வா.சா.1 தனது பிராதில் தாவா சொத்து சர்வே எண்:24/5 பி-யின் தென்புறம் என்றும் தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதன் ஆதி சர்வே எண்:24/5 என்றும் மொத்த விஸ்தீரணம் 0.06.50 ஏர்ஸ் என்று கூறியுள்ளார். வாதி தரப்பில் தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

7(20). வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கோட்டாட்சியர் உத்தரவிற்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்று எதிர்வாதம் செய்துள்ளேன் என்றால் சரிதான் என்றும் பூர்வீக சொத்து என்பதற்கான எஸ்.எல்.ஆர்., யூடிஆர் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே வாதி தரப்பில் தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

7(21). 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தாவா முழு சொத்தின் சர்வே எண்:24/5 என்பது எஸ்எல்ஆர் சமயத்தில் ராமன் சேர்வை மற்றும் பொன்னையா சேர்வை பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்று கூறியுள்ளார். பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியமாகும் என்று சாட்சியமளித்துள்ளார்.

7(22). வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சர்வே எண்:24/5 எஸ்எல்ஆர் சமயத்தில் ராமன், பொன்னையா பெயரில் பட்டா இருந்ததா என்றால் இருந்திருக்காலம் என்றும் யூடிஆர் சமயத்தில் பாண்டியம்மாள், முத்தையா பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7(23). பி.வா.சா.ஆ.2 (எஸ்.எல்.ஆர்) ஆவணத்தை பரிசீலிக்கையில் 07.11.2015 ல் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மாத்தூர் குரூப், சர்வே

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:44 +0530

எண்:24/5 ல் 0.16 விஸ்தீரணம் கொண்ட நிலம் ராமன் சேர்வை, பொன்னக்கிடான் மகன் பொன்னையா சேர்வை ஆகியோர் பெயரில் பட்டா எண்:474 ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(24). 1ம் பிரதிவாதி தாவா சொத்தானது தனக்கு பூர்வீக பாத்தியம் என்றும் தனது பாத்தியத்தையும், அனுபவத்தையும் நிரூபணம் செய்வதற்கு தாங்கள் பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ரிஜிஸ்தர் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ரிஜிஸ்தர் தங்களது உரிமைமூலத்தை நிரூபிக்கின்றன என்று வாதம் முன்வைத்தனர். இந்நேரத்தில் செட்டில்மெண்ட் ரிஜிஸ்தர் குறித்து மேலமை நீதிமன்றத்தின் முன்தீர்ப்பினை இந்நீதிமன்றம் நினைவு கூர்கிறது. The Hon'ble High Court of Madras K.N.Srinivasa Goplan -vs- V.Siva Sankaran reported in (2002)2 M.L.J.210 has held that "Joint family owning properties – Proof of – absence of title deed – Extract of Settlement register can be accepted as evidence of title. The plaintiff's case is that they were the ancestral joint family properties. To substantiate that they were ancestral joint family properties, Ex.A28 Settlement Register has been produced. It is seen from Ex.A-28, that these items have been shown as the properties of the ancestors 'G' and four others, 'G' being the plaintiffs grandfather. In respect of ancestral properties, one cannot have regular title deeds. This has been totally lost sight of by the lower appellate Court."

7(25).பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் (யூடிஆர்) எஸ்.மாத்தூர் கிராமத்தில் வசிக்கும் சந்திரன் மனைவி பாண்டியம்மாள் மற்றும் ஒருவர் சர்வே எண்:24/5 ல் 0.06.5 விஸ்தீரணம் கொண்ட புஞ்சை நிலத்திற்கு பட்டா வழங்கபட உள்ளதாக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது தெரிய வருகிறது. தாவா சொத்து வாதிகளுக்கு பூர்வீக சொத்தாக இருந்தால் வாதியின் பெயரோ, அவரது தந்தை பெயரோ எஸ்எல்ஆர் நகல், யூடிஆர் அ பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். அவ்வகையில் எஸ்எல்ஆர், யூடிஆர் பதிவேடுகளில் வாதியின் பெயரோ, அவரது தந்தை பெயரோ குறிப்பிடவில்லை. எனவே தாவா சொத்தானது வாதிகளுக்கு

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:50 +0530

பூர்வீக பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

7(26). வாதி தனது பிராதில் தாவா சொத்தை 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர் அவரவர்களுக்கு பாத்தியப்பட்ட தலா 5 1/2 செண்ட் இடத்தினை பாத்தியமடைந்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வகையறாவினை உரிய முறையில் செலுத்தி அனுபவம் செய்து வந்தனர் என்று கூறியுள்ளார். தாவா சொத்தானது 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர்களுக்கு தலா 5 1/2 செண்ட் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

7(27). வாதி தனது பிராதில் சர்வே எண்:24/5ல் 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட 5 1/2 செண்ட் இடத்தை 05.12.2008ம் தேதி வசந்தா என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்து விட்டார் என்று கூறியுள்ளார்.

7(28). 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் சர்வே எண்:24/5ல் ஒரு பகுதியை வசந்தா என்பவருக்கு 05.12.2008ம் தேதி 1ம் பிரதிவாதி பதிவு செய்த பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றும் சர்வே எண்:24/5ன் மொத்த விஸ்தீரணம் 16 செண்ட் என்றம் அதில் 1ம் பிரதிவாதிக்கு 8 செண்டும், பொன்னையா சேர்வை தரப்பினருக்கு 8 செண்ட் பாத்தியம் என்றும் 1ம் பிரதிவாதி வசந்தா என்பவருக்கு விற்பனை செய்த பகுதி போக மீதம் உள்ள 2.76 செண்ட் ஆக கிழக்கு பக்கம் 1ம் பிரதிவாதி அனுபவத்தில் காலியிடமாக உள்ளது என்று கூறியுள்ளார்.

7(29). பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வசந்தாவிற்கு ரூ.16,200/-க்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான் என்றும் அதில் என் பங்கிற்கு ஒதுக்கிய சொத்து என்று கிரையம் சொடுத்துள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7(30). வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் சர்வே எண்:24/5ல்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:57:56 +0530

ஹெக்டேர் 0.06.5 க்கு செண்டு 16 ல் என் பாகம் 3 ல் 1 க்கு வடபுறம் செண்டு 5.34 க்கு 2328 சதுரடி சகலபாத்தியங்களையும் 1 ம் பிரதிவாதி வசந்தா என்பவருக்கு 05.12.2008 ல் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளது தெரிய வருகிறது. 1 ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட 8 செண்டில் வடபுறம் 5.34 யை வந்தா என்பவருக்கு விற்பனை செய்தது போக மீதம் 2.76 செண்ட்-யை 1 ம் பிரதிவாதி காலியிடமாக அனுபவித்து வருவது தெரிய வருகிறது.

7(31). பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாத்தூர் கிராமம், சர்வே எண்:24/5 எ, விஸ்தீரணம் 0.2.16 க்கு அ.வீரபாண்டி மனைவி வசந்தா என்பவர் பெயருக்கு பட்டா எண்:844 வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலிக்கையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.மாத்தூர் கிராமம், சர்வே எண்:24/5 பி, விஸ்தீரணம் 0.4.34 க்கு பாண்டியம்மாள், முத்தையா சேர்வை ஆகியோர்கள் பெயரில் பட்டா எண்:995 வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆவணங்களின் மூலம் தாவா சொத்தின் சர்வே எண்24/5 ஆனது வசந்தா என்பவர் பெயருக்கு சர்வே எண்:24/5 எ எனவும், 1 ம் பிரதிவாதி தனது பாகத்தில் 5.34 செண்ட் சர்வே எண்:24/5 எ என கிரையம் செய்தது போக மீதம் உள்ள சொத்திற்கு 1 ம் பிரதிவாதி, முத்தையா சேர்வை பெயரில் சர்வே எண்:24/5 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(32). பி.வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்து 16 செண்ட் என்றும் மேற்படி 16 செண்டில் பாண்டியம்மாள் 2008 ல் விற்பனை செய்யும் போது 3 நபர்கள் பெயரில் பட்டா இருந்தது என்றால் இல்லை என்றும் 2 நபர்கள் பெயரில் தான் பட்டா இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்தானது 1 ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:58:02 +0530

7(33). பி.வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கிரையத்தின் படி பாண்டியம்மாள் அவரது சொத்தை விற்பனை செய்து விட்டார் என்றால் 5 செண்டை விற்பனை செய்தது போக பாண்டியம்மாள் 2 1/2 செண்ட் உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே பி.வா.சா.3ன் சாட்சியம் 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் விதமாக அமைந்துள்ளது.

7(34). வாதிகள் தங்களது பிராதில் 1ம் பிரதிவாதி தனது பாகத்தை கிரையம் செய்து கொடுத்த பின்னர் 1ம் வாதி மற்றும் முத்தையா சேர்வை பெயரில் மட்டுமே சர்வே எண்:24/5பி ஏற்பட்டிருக்க வேண்டும் ஆனால் 1ம் பிரதிவாதி தனது பெயரையும் சேர்த்து 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் முத்தையா சேர்வை ஆகியோர்கள் பெயரில் கூட்டுபட்டா எண்:570 ஏற்படுத்தி விட்டனர் என்று கூறியுள்ளார்.

7(35). வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பட்டாவில் எனது பெயர் 1994ல் விடுபட்டதால் பட்டாவில் எனது பெயரை சேர்த்தேன் என்றும் மேற்படி விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில் பட்டாவில் வாதியின் பெயர் விடுபட்டிருந்தால் மேற்படி விவரத்தை தனது பிராதில் குறிப்பிட்டு கூறியிருப்பார். எனவே வாதி தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்பது தெரிய வருகிறது.

7(36). வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலிக்கையில் சர்வே எண்:24/5 திருமதி.பாண்டியம்மாள் என்பவர் பெயரில் பட்டா உள்ளதால் வேறு ஒருவர் பெயரை கூட்டாக 10(1) கணக்கில் தவறாக சேர்க்கப்பட்டதை நீக்க கோரி தாக்கல் செய்த மனுவிற்கு 29.09.2016ம் தேதி விசாரணை நடைபெற உள்ளதாக காயாம்பு சேர்வைக்கு தேவகோட்டை சார்ஆட்சியர் விசாரணை அறிவிப்பு அனுப்பியுள்ளது தெரிய வருகிறது.

7(37). 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டதால் 1ம் வாதி பெயரை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.23 18:58:08 +0530

பட்டாவிலிருந்து நீக்க வேண்டி தேவகோட்டை ஆர்டிஓ அவர்கள் விசாரணை செய்து கடந்த 28.04.2017 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று கூறியுள்ளார்.

7(38). பி.வா.சா.ஆ.1 ஆவணமான தேவகோட்டை சார் ஆட்சியரின் உத்தரவில் சர்வே எண்:24/5 பி- பட்டா எண்:570 ல் கருப்பையா மகன் காயாம்பு சேர்வை என்ற பெயர் RIPT மூலம் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் விசாரணையில் மேற்படியாரின் பூர்வீக சொத்து என்பதற்கு மேற்படியாரின் பெயரோ, அவரது தந்தை பெயரோ எஸ்எல்.ஆர் நகலிலும், யூடிஆர் அ பதிவேட்டிலும் இடம் பெறவில்லை என்றும் மேற்படியா பெயர் எஸ்.மாத்தூர் குரூப் பட்டா எண்:570 ல் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளதால் ரத்து செய்வதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(39). வா.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்து யூடிஆர்-ல் ச.பாண்டியம்மாள், முத்தையா சேர்வை ஆகியோர் பெயரில் இருந்தது என்றும் மேற்படி உத்தரவில் காயாம்பு பெயர் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் பெயர் நீக்கம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளாார்.

7(40). வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தேவகோட்டை கோட்டாட்சியில் உத்தரவில் ஆர்.ஐபிடி உத்தரவு மூலம் சேர்க்கப்பட்ட எனது பெயரை நீக்கம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7(41). பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலிக்கையில் 21.03.2019 ம் தேதி மனுதாரர் சமர்பித்த ஆவணங்களின் படி சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மாத்தூர் கிராமத்தில் சர்வே எண் 24/5 பி விஸ்தீரணம் 0.04.34 பழைய பட்டா எண்: 570 பாண்டியம்மாள், முத்தையா சேர்வை, காயாம்பு சேர்வை என்பவர்கள் பெயரிலிருந்து புதிய பட்டா எண்:995 பாண்டியம்மாள், முத்தையா சேர்வை ஆகியோர்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7(42). வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 ஆவணமான

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.23 18:58:15 +0530

வீட்டு வரி ரசீது மற்றும் வா.சா.ஆ.4 ஆவணமான 10(1) அடங்கல் போன்ற ஆவணங்கள் தாவா சொத்து தவறுதலாக வாதியின் பெயர் சேர்க்கப்பட்டதாக கூறும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பின்பு ஏற்பட்ட ஆவணங்கள் என்பது தெரிய வருகிறது. எனவே தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதனை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

7(43). வாதிகள் தங்களது பிராதில் தாவா சொத்தின் தெற்குபுறம் வாதிகள் மாட்டுக்கூடம் கட்டியும் காலியிடத்தில் வைக்கோல் போர் வைத்து ஆடு, மாடுகள் கட்டியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று கூறியுள்ளார். வாதிகள் தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில் சர்வே எண்:24/5 பி-ல் தென்புறம் சுமார் 5 1/2 செண்ட்-ல் சிறிய ஓட்டுக்கூடமும், அதிலுள்ள மின் இணைப்பும் மற்றும் சகல பாத்தியங்களும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தானது காலியிடமா? சிறிய ஓட்டுகூடம் உள்ளதா? என்பது குறித்து வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

7(44). வாதிகள் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்தின் சர்வே எண்:76/5 என நினைக்கிறேன் என்றும் எஸ்.எல்.ஆர், யூடிஆர் பட்டா யார் பெயரில் இருந்தது என்பது தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே வா.சா.2 ன் சாட்சியம் வாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை.

7(45). வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்:24/5 ஆனது பாண்டியம்மாள், முத்தையா சேர்வை, காயாம்பு சேர்வை ஆகியோர்கள் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி முத்தையா சேர்வை என்பவரையோ, அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. எனவே இவ்வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது.

மேலே கண்ட விரிவான விவாதங்களின் அடிப்படையில், தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதையும், தாவா சொத்து எஸ்.எல்.ஆர். யூடிஆர் காலத்திலும்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:58:21 +0530

வாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதையும், தாவா சொத்தின் அனுபவம் வாதி வசம் உள்ளது என்பதை வாதி தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையில், மேலும் இவ்வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என 1 முதல் 5 எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**8. வழக்கெழுவினா 5 ன் மீதான தீர்முடிவு:**

வாதிகளுக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு பார்க்கும் போது வாதிகளுக்கு எந்தவொரு பரிகாரமும் வழங்குவதற்கில்லை என்றும் அவரவர் செலவுத்தொகையினை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுகிறது.

**இறுதி முடிவு:**

1 இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. அவரவர் செலவுத் தொகையினை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜுன் 23–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:58:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| வா.சா.1 | காயாம்பு (வாதி) |
| வா.சா.2 | கருவப்பாண்டியன் |
| வா.சா.3 | கிருஷ்ணரூபன் |

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.09.1994 | சர்வே எண்:24/5-க்கு எஸ்.மாத்தூர் கிராம நிர்வாக அதிகாரிக்கு பிர்க்கா ஆய்வாளர் வழங்கிய தாக்கீது அசல் |
| வா.சா.ஆ.2 | 05.12.2006 | கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ-3 | 06.10.2016 | சர்வே எண்:24/5 பி-யின் 10(1) கணிணி பட்டா |
| வா.சா.ஆ.4 | 25.02.2015 | 1424 பசலிக்கான ரசீது அசல் |
| வா.சா.ஆ-5 | 2014-2015<br>2016-2017 | வீட்டு வரி ரசீதுகள் அசல் |
| வா.சா.ஆ.6 | 16.07.2016 | மின்கட்டண ரசீது அசல் |
| வா.சா.ஆ.7 | 16.07.2015 | மின்கட்டண ரசீது அசல் |
| வா.சா.ஆ.8 | - | சர்வே எண்:24/5 வில்லங்கசான்று கணிணி நகல் |
| வா.சா.ஆ.9 | 22.09.2016 | தேவகோட்டை, சார் ஆட்சியரின் விசாரணை அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.10 | 2008 - 2023 | குடிநீர் வரி ரசீதுகள் அசல் |

**1ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | பாண்டியம்மாள் |
| பி.வா.சா.2 | முத்துராமன் |
| பி.வா.சா.3 | போஸ் |

**1ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 28.04.2017 | தேவகோட்டை சார் ஆட்சியர் உத்தரவு அசல் |
| பி.வா.சா.ஆ.2 | - | சர்வே எண்:24/5 ன் எஸ்.எல்.ஆர் பதிவேடு நகல் |
| பி.வா.சா.ஆ.3 | - | சர்வே எண்:24/5 ன் யூடிஆர் பட்டா அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 21.03.2019 | பட்டா மாறுதல் உத்தரவு கணிணி நகல் |

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:58:46 +0530

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.5 | 26.01.2026 | சர்வே எண்:24/5 எ-யின் 10(1) கணிணி பட்டா |
| பி.வா.சா.ஆ.6 | 26.01.2026 | சர்வே எண்:24/5 பி-யின் 10(1) கணிணி பட்டா |

/ உண்மை நகல்/

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.23 18:58:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி